# பண்டையக் கால விளையாட்டுக்கள்

**முனைவர் க. லெனின்**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
எம்.ஜி.ஆர் கல்லூரி, ஒசூர்

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

பண்டையக் காலத்தில் பொழுதுபோக்கிற்காகச் சிறுசிறு விளையாட்டுக்களை ஆடிய மனிதன் பின்னர் அவற்றின் பெருமைகளை உணர ஆரம்பித்தான். விளையாடும்போது உடலில் ஏற்படும் மாற்றங்களை அறிந்துள்ளான். விளையாடுவது உடற்பயிற்சி செய்வது போன்றதாகும். அத்தகைய விளையாட்டுக்கள் சங்க காலத்திலும் நடைபெற்றன. “விளையாட்டை மனமகிழ்ச்சி ஊட்டும் செயல் என்பர். இவ்விளையாட்டு பொழுது போக்காக மட்டுமின்றி உடல்நலம், மனநலம் பேணுபவையாகவும் உள்ளது. விளையாட்டிலும் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம்பெறுகின்றன”[1] என சு. சக்திவேல் கூறுகின்றார். ஆண்கள் விளையாட்டு, பெண்கள் விளையாட்டு, சிறுவர்-சிறுமியர் விளையாட்டு என இவ்வாய்வில் முன்வைக்கப்பட்டுள்ளன.

## ஆண்கள் விளையாட்டு

வீரத்தோடு பல விளையாட்டுக்களை விளையாடினார்கள் என்பதற்குப் பல சான்றுகள் சங்க இலக்கியத்தில் காணலாம். காளையை அடக்கி தன்னுடைய வீரத்தைப் பறைச்சாற்றினான். ஜல்லிக்கட்டு, காளையை அடக்குதல், ஏறுதழுவுதல் என்னும் பெயர்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

**“நோக்கு அஞ்சான் பாய்ந்த பொதுவினைச் சாக்குத்தி,**
**கோட்டிடைக் கொண்டு, குலைப்பதன் தோற்றம்காண்”**
**(கலி.101:16-17)**

என்று ஏறு தழுவுதலைப் பற்றிக் கலித்தொகை சுட்டுகின்றது. புல்லிய நிறத்தைக் கொண்ட ஏற்றின் நோக்கை அஞ்சாது பாய்ந்தான் ஆயர் இளைஞன். அவனைச் சாவக்குத்தி, தன் கொம்புகளுக்கு இடையேகொண்டு, அவனைக் குலைக்கின்ற எருதுகள் என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். ஏறுதழுவல் விளையாட்டு வேறிடங்களிலும் (கலி:102,103,104) காணப்படுகின்றது. வீர விளையாட்டாக இது கருதப்பட்டுள்ளது. தலைவியை அடைவதற்காக இளைஞர்கள் வீரவிளையாட்டில் பங்குபெற்று வந்துள்ளனர் எனக் கலித்தொகைப் பாடல்கள் உரைக்கின்றன. ஆண்மகனின் வீரத்திற்கு ஏறு தழுவுதலைக் குறிக்கின்றனர். இது மிகவும் ஆபத்தான விளையாட்டாகக் கருதப்படினும் சங்க காலம் தொட்டு இதனைப் பாரம்பரிய, வீர விளையாட்டாகக் கருதி விளையாடுகின்றனர்.

ஆண்கள் விளையாட்டில் மற்றொன்றாக தாயம் விளையாட்டு சொல்லப்படுகிறது. இது வெயிலின் வெப்பம் தாங்க முடியாமல் மர

நிழலில் விளையாடப்படும் விளையாட்டாகும். வயதானவர்கள் பெரும்பான்மையாக ஆடுவார்கள். பெண்களும் விளையாடுவதும் உண்டு. இவ்விளையாட்டே பிற்காலத்தில் சூது விளையாட்டாக மாறியது. தாய விளையாட்டிலே பத்து தாயம் போட்டவன் வெற்றி பெறுவான் எனக் கலித்தொகை (136) பாடலில் சூதாட்டம் பற்றிய குறிப்பு வருகின்றது.

ஆண்கள் பொழுதுப்போக்கிற்காக நீச்சல் அடித்து விளையாடி மகிழ்வார்கள். தலைவன் பரத்தையருடன் மடுக்களிலே நீராடி விளையாடினான் எனவும் (கலி:30), அப்படியாக நெடும்பொழுது நீராடி விளையாடினால் கண்கள் சிவந்து போகும் எனவும் (குறுந்:354) இலக்கியங்கள் கூறுகின்றன.

**மகளிர் விளையாட்டுகள்**

மகளிர் விளையாட்டுகள் சங்கப்பாடல்களில் அதிகம் சுட்டப்படுகின்றன. பந்தாடல், கழங்காடல், ஊஞ்சல், பாவை செய்தல், நண்டு அலைக்கழித்தல், புனலாட்டம், பூக்களைப் பறித்தல், ஓரை போன்ற விளையாட்டுக்களில் மகளிர் ஈடுபட்டு வந்துள்ளனர். “பெண்கள் கூட்டமாக விளையாடச் செல்வர். விளையாட்டு மகளிர் கூட்டத்தை ஆயம், ஓரையாயம், பொய்தல் மகளிர் என்பர்”2 என பா. இறையரசன் குறிப்பிடுகிறார்.

**பந்தாடல்**

பந்து விளையாடலைச் செய்யும்போது தனித்துச் செல்லமாட்டாள் தலைவி என குறுந்தொகை (396) கூறுகிறது. அக்கால மகளிர்கள் பந்து விளையாட்டினைப் பெரிதும் விரும்பி விளையாடியுள்ளனர். நற்றிணையில்,

**“செல்வத் தந்தை இடனுடை வரைப்பின்,**
**ஆடு பந்து உருட்டுதல் போல ஓடி” (நற்.324:6-7)**

எனக் குறிக்கப்பட்டுள்ளது. யானை போன்ற செல்வத்தை உடையவன் தலைவியின் தந்தை. அவனது அகன்ற இடத்தில் பந்தைக் காலால் உருட்டி ஓடியாடி அங்குமிங்குமாக விளையாடினாள் தலைவி என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பந்தெறிந்து கழங்காடலைப் பற்றி அகநானூறு (17,49) கூறும். தலைவி அழகிய இனியச் சொற்களையுடைய தோழியருடன் சேர்ந்து, பந்தாடும் போது சிறிது தூ ரம் சென்று வந்தாளாயினும் மிகவும் நொந்து பெரிதும் வருந்துவாள் எனவும் (அகம்:153), மணப்பருவம் அடைந்துள்ள தலைவி, இன்னும் சிறுபிள்ளைத்தனமாய் புறத்தே பந்தினை எறிந்து விளையாடிக் கொண்டிருந்தாள் எனவும் (அகம்:275), மகளிர் வீட்டில் இருக்கும்போது பந்தாடுதல் என்பது வழக்கமான ஒன்றாகும் என (ஐங்:295) இலக்கியங்கள் கூறுகின்றன. பெரும்பாணாற்றுப்படை

**“வான்தோய் மாடத்து, வரிப்பந்து அசை,**
**கைபுனை குறுந்தொடி தத்த, பைப்பய,**
**மூத்த வார்மணல் பொற்கழங்கு ஆடும்” (பெரும்பாண்.333-335)**

என்கிறது. அல்குலில் துகில் கிடந்து அசைய, காலில் கிடக்கும் பொற்சிலம்பு ஒலிக்க, பெரிய மலைப்பக்கத்தே மன எழுச்சியால் ஆரவாரிக்கும் மயில் போல உலவி வானத்தைத் தீண்டும் மேல்நிலை மாடத்தின்கண் பந்தாடுவர். பந்தாடி இளைத்தாராயின் பின்னர் கையில் அணிந்த குறிய வளையல்கள் அசையும்படி மணலிடத்தே கல் எறிந்து ஆடுகின்ற பட்டினம் இது என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். பந்தடித்து அருவியில் ஆடும் மகளிர்கள் (கலி:40), கிளிக்கு மழலை மொழிகற்றுக் கொடுத்து பந்தெறிந்து ஆடும் மகளிர்கள் (அகம்:49) போன்றவை இலக்கியங்களில் சுட்டப்பெறுகின்றன.

**கழங்காடல்**

கழங்கு என்பது கழற்சிக்காய் அல்லது சிறு கல்துண்டுகள் இரண்டு பக்கமும் வைத்து ஓடியாடி விளையாடும் விளையாட்டு.

**“பந்தும் பாவையும் கழங்கும் எமக்கு ஒழித்தே” (ஐங்.377:4)**

பெண்கள் பந்தும் பாவையும் ஆடியது போலவே கழங்கு விளையாட்டையும் ஆடி வந்திருக்கின்றனர். வீட்டுமனையின் முற்றத்தில் தொடியணிந்த மகளிர் கழங்கு விளையாடினார்கள் (நற்:79) கழங்கு விளையாட்டைப் பற்றி (அகம்:334) குறிப்பிட்டுள்ளது.

**புனலாட்டம்**

பெண்கள் நீரிலே குதித்து விளையாடும் விளையாட்டு புனலாட்டம் அல்லது நீர் விளையாட்டு எனக் குறிப்பர். ஆறு, அருவி, குளம் போன்ற இடங்களில் ஆடும் ஆட்டமாகும். இதனை நற்றிணை சுட்டுகிறது.

**“கடல் ஆடு வியல் இடைப் பேர் அணிப் பொலிந்த” (நற்.307:3)**

மகளிர் சென்று கடலிலே நீராடி விளையாடினர் என ஆசிரியர் குறிக்கின்றார். கடலில் தோழியுடன் நீராடி மகிழ்தல் (நற்:245), கடலில் பாய்ந்து மகளிர் நீராடுதல் (நற்:395), அருவியில் நீர் விளையாட்டினை மகளிர் விளையாடினர் (குறுந்:353), சுனை நீராடல் (குறுந்:325), கடல் பகுதியில் உப்பங்கழி சூழ்ந்தப் பகுதியில் விளையாடல் (நற்:27), கடற்கரையில் உள்ள குடியிருப்புகளில் இருக்கும் மகளிர்கள் ஆடும் களமாகக் கடல் விளங்கியது (நற்:299). மலையில் இருந்து நீர் ஊற்றும் அருவியில் புனல் விளையாடல் (அகம்:59), புனல் விளையாட்டு (ஐங்:17,71,80), நீலமணிப் போன்ற சுனையில் மகளிர் நீராடுதல் (நற்:339) போன்றவை இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ளன.

**“குறுந்தொடி மகளிர் குரூஉப்புனல் முனையின்,**
**பழனப் பைஞ்சாய் கொழுது, கழனிக்**
**கரந்தைஅம் செறுவின் வெண்குருகு ஓப்பும்” (அகம்.226:4-6)**

சிறிய வளையல்களை அணிந்து பெண்கள் புனல் விளையாட்டை வெறுக்கும் போது பொய்கையிலுள்ள கோரைகளைப் பறித்தெடுத்து, வெண்ணிற நாரைகளை ஓட்டி விளையாடிய செய்தி ஐங்குறுநூற்றில் சுட்டப்பட்டுள்ளது. மேலும் ஆற்றில் பொங்கி வருகின்ற புதுநீரில் மனம் மகிழ விளையாடுவதை நற்றிணை (68) எடுத்துரைக்கிறது.

**அலவன் ஓட்டுதல்**

ஆற்றோரத்திலும் கடலோரத்திலும் நண்டுகளைத் துரத்துவது பழங்கால மகளிர் விளையாட்டுக்களில் ஒன்றாக இருந்துள்ளது.

**“ஓரை மகளிர் ஆராங்கு ஆட்ட**
**ஆய்ந்த அலவன் துன்புறு துனைபரி” (குறுந்.316:5-6)**

கடலின் அலைகள் மோதுகின்ற மணலில் விளையாட்டு மகளிர்கள் ஒன்று போல் கூடி விளையாடினர். பிறகு இளமையையுடைய பெண்கள் நடை தளர்ந்த நண்டினை அலைக்கழித்து விளையாடினர். இவ்வாறு நண்டுகளை அலைக்கழிப்பதும், பூக்களைப் பறித்து விளையாடுவதும் பெண்களின் பொழுதுபோக்குகளாக இருந்துள்ளமையை அறியமுடிகிறது.

**வண்டல் பாவை**

வண்டல் மண்ணைக்கொண்டு பாவை செய்து விளையாடுவது வண்டல்பாவை விளையாட்டு ஆகும். இதனை ஐங்குறுநூறு (124) சுட்டுகிறது. கொல்லிமலையில் ஒரு பகுதியில் செதுக்கப்பட்ட பாவை கொல்லிப்பாவை எனப்பட்டது.

**“வண்டற் பாவை வௌவலின்**
**நுண்பொடி அளைஇக் கடல் தூர்ப்போளே” (ஐங்.124:2-3)**

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலடிகளில், வண்டல் மண்ணால் பாவை செய்து அதற்கு மலர் புனைந்து விளையாடுவது இளம் பெண்களின் வழக்கம். இவ்விளையாட்டு மணல்வீடு கட்டி விளையாடுவது போன்றதாகும். தோழியரோடு வண்டல் விளையாடல். ஈனாதப் பாவையை தன் தலையில்

வைத்துக்கொண்டாள் தலைவி எனவும் (நற்.127), பலரும் இறங்கி நீராடுகின்ற துறையிலே பாவையானது நீரிலே அடித்துச் சென்றதனால் தலைவி துன்பப்பட்டாள் எனவும் (ஐங்.69), சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளதை அறியமுடிகின்றது.

**ஓரை விளையாட்டு**

"ஒரை எனும் சொல் 'விளையாட்டு' என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது என்றும் ஆய்வாளர் சிலர் கருதுகின்றனர்"3 என்ற வெள்ளைவாரணனாரின் கூற்றை மேற்கோளாகக் காட்டுகிறார் கே.கே. பிள்ளை.

**"ஓரை மகளிர் அஞ்சி ஈர்ஞெண்டு**
**கடலில் பரிக்கும் துறைவனொடு ஒருநாள்" (குறுந்.401:3-4)**

நீர் ஒழுகும் கூந்தலையுடைய விளையாடுகின்ற ஆய மகளிர்கள், கடலிலே நண்டினை அலைக்கழித்தலை விளையாடினார்கள் என்கிறது குறுந்தொகை. ஓரை என்பது ஏதாவது ஒரு விளையாட்டை விளையாடுதலைக் குறிப்பதாக அமைந்தது. ஓரை விளையாடிய நிகழ்வுகளைக் குறுந்தொகை (316), புறநானூறு (176) ஆகிய இலக்கியங்களில் இடம்பெறும் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

**ஊஞ்சலாடுதல்**

மரம் போன்ற ஏதேனும் உயர்ந்த இடத்தில் கயிற்றைக் கட்டி, அக்கயிற்றில் ஊஞ்சல் ஆடுகின்ற விளையாட்டாகும். சங்க இலக்கியத்திலும் மகளிர் ஊஞ்சலாடும் நிகழ்வுகள் சுட்டுப்பட்டுள்ளன. அகநானூற்றில்,

**"ஒண்தொடி மகளிர்க்கு ஊசலாக**
**ஆடுசினை ஒழித்த கோடுஇணர் கஞூலிய" (அகம்.368:4-5**

என்னும் அடிகளில், வளையல் அணிந்த மகளிர் காவல் காத்திருந்தனர். அம்மகளிர் ஊசல் ஆடும் பொருட்டு கிளைகள் வெட்டப்பட்ட வேங்கை மரத்தில் உள்ள கொம்பில் கயிற்றைக் கட்டி ஆடினார்கள் என ஆசிரியர் உரைக்கின்றார். முறுக்கிய நரம்பால் செய்யப்பட்ட ஊசலில் மகளிர் ஆடினார்கள் எனக் கலித்தொகை (131) கூறுகிறது.

**மகளிரின் பிற விளையாட்டுகள்**

பெண்கள் கிளிகளை வளர்த்துப் பேச்சுக் கற்பித்தல் வழக்கமாகும் (ஐங்.375), ஆட்டினத்து ஆயர்கள் மெய்யை மெல்ல அசைத்து விளையாடுதல் (கலி.111), தாம்பலப்பூச்சிகளைப் பிடித்துப் பார்த்து விளையாடுதல் (நற்.362), தலைவி சிலம்பு உடையும் அளவிற்கு விளையாடுதல் (நற்.363), மகளிர் சிறுசோறாக்கி விளையாடுதல் (அகம்.110), சிற்றில் விளையாடிச் சிறந்திடுக எனத் தாய் கூறுவது (அகம்.156), தோழியரோடு குவிந்த மணல்மேட்டில் ஏறி சோலையில் விளையாடினார்கள் (அகம்.180). மணற்குன்றின் பின்னால் ஒளிந்துகொண்டு விளையாடும் விளையாட்டு (அகம்.380), மகளிர் கழற்சிக் காய்களைக் கொண்டு வீசி விளையாடல் (புறம்.36), போன்றவை சங்க இலக்கிங்களில் விளையாட்டுகளாகச் சுட்டப்பட்டுள்ளன.

**சிறுவர் விளையாட்டு**

குழந்தை பிறந்து வளரும்போது மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடல் வேண்டும். குழந்தை சோம்பி இருப்பது அதன் வளர்ச்சியைக் கெடுக்கும். இவ்வாறு குழந்தைகள் என்போர் நன்கு துள்ளி விளையாட வேண்டும் என்பதைக் கலித்தொகை சுட்டியுள்ளது.

**"கவழும் அறியா நின்கைபுனை வேழம்**
**புரிபுனை பூங் கயிற்றின் பைப்பய வாங்கி**
**அரிபுனை புட்டிலின் அங்கண் ஈர்த்து" (கலி.80:6-8)**

என்ற அடிகளில் கவளம் கொள்ளுதல் அறியாத கையாற் செய்த யானையை, புரிபுனை பூங்கயிற்றினால் கட்டி பைய இழுத்துக் கொண்டு, காலில் கட்டிய மணிகள் ஒலிக்க சிறுவர்கள் இழுத்து வருவர். "சிறு பிள்ளைகள் பழக்கப்பட்ட யானைகளைக் குளிப்பாட்டி மகிழ்வர். மரத்தின் உச்சியில் ஏறி நீர்நிலையில் 'துடும்' எனப் பாய்வர். தச்சர்களின் சிறுமகன்கள் காட்டுக்குள் புகுந்து கண்ட மரங்களையும் செதுக்கிப் பொழுதுப்போக்குவர். வேடர்களின் மகன்கள் பொந்துகளில் குச்சியை விட்டு எலி பிடிப்பர். ஆறலைக் கள்வர்களின் பிள்ளைகள் அம்பை விட்டுப் பழகுகின்ற போது வழிச்செல்வோர் மேல் விட்டு அவர்கள் துடிப்பதை வேடிக்கைப்பார்த்து மகிழ்வர்"4 என்று சிறுவர்களின் விளையாட்டை பா. இறையரசன் குறிப்பிடுகிறார். சிறுவர்கள் சந்தினைச் சுற்றிச் சுற்றி விளையாடல் (குறுந்.394), போன்றவை பாடலடிகளில் சுட்டப்பட்டுள்ளன.

**"கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டு ஆடும்**
**வில் ஏர் உழவர் வெம்முனைச் சீறூர்ச்" (நற்.3:4-5)**

வேறு தொழில் ஒன்றும் கற்றறியாத சிறுவர்கள் பொன்னை உரைத்து மாற்றுப் பார்க்கும் கல்லைப் போன்ற ஆடுகளத்தைக் கீறிக்கொண்டு நெல்லிக்காய்களை வட்டாக வைத்து ஆடுவர் என்று நற்றிணைப் பாடல் சுட்டுவதை அறியமுடிகிறது.

சிறுவீடு கட்டி சமைத்து விளையாடல் (நற்.9), சிறுவர்கள் பாறையின்மீது வரையப்பட்ட குருவியை உயிருடன் இருப்பதாக நினைத்துக்கொண்டு குச்சியால் அடித்தார்களாம் (நற்.58), எருமை மாட்டின் பாலைக் கரந்தும், அதன் மீதேறி ஊர் சுற்றுவதும் சிறுவர்களின் விளையாட்டில் ஒன்றாக அமைந்தது (நற்.80), பனை மடலால் செய்த குதிரையைத் தேர்பூட்டி சிறுவர்கள் இழுத்துச் செல்வதை (நற்.220) யும், சிறுவர்கள் தேரினை உருட்டி நடைபழகுவதையும் (கலி.81) காணமுடிகிறது.

**"கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி**
**ஊர்ந்துபெயர் பெற்ற எழில்நடைப் பாகரொடு" (சிறுபாண்.252-258)**

தச்சர் தொழில் முற்றுப்பெற்ற பின்னர், அத்தேரின் மீது ஏறிப்பார்த்து நல்ல ஓட்டம் உண்டு என்று புகழப்பட்ட சிறுபிள்ளையின் தேரின் வலிமை சிறுபாணாற்றுப்படையில் கூறப்படுகின்றது. தச்சனால் செய்யப்பட்ட குதிரையைச் சிறுவர்கள் விளையாட்டிற்காக இழுத்துச் சென்றார்களாம் (குறுந்.61), அத்தேரினை இழுக்கச் செல்லும் புதல்வன் (ஐங்.66), சிறுதேர் உருட்டி விளையாடல் (பெரும்பாண்.248-253), (ஐங்.96,403), (அகம்.90) மணலில் சிற்றில் இழைத்து கூடி விளையாடல் (அகம்.230) போன்றவை சிறுவர்களின் விளையாட்டுகளாகக் காணப்படுகின்றன.

**"இளையவர் தழூஉ ஆடும் எக்கர் வாய்வியன் தெருவின்**
**விளையாட்டிக் கொண்டு வரற்கு எனச் சென்றாய்" (கலி.83:3-4)**

பிள்ளைகள் தம்மிற் கூடி விளையாடும் சுடுமணல் செறிந்த அகன்ற தெருவிலே பிள்ளைகள் விளையாடுவதற்கு அழைத்துச் செல்வதைக் காணமுடிகிறது. சிறுமியர் விரும்பி விளையாடும் ஒருவகை விளையாட்டு 'பொய்தல்' எனப்பட்டது. அதனை ஆடி முடித்து வெண்மணலில் குரவை ஆடுவார்கள் என்று ஐங்குறுநூறு (181) கூறுகிறது. விக்கிப்பீடியாவில் சங்ககால விளையாட்டுகளாகப் பின்வருவனவற்றைத் தொகுத்துள்ளனர்.

"அக்குளுத்தல், அலவன் ஆட்டல், அன்புப்போர், உடல்வித்தை, உழலை, ஊசல், ஊதல், ஊன்றித் தாண்டல், எண்ணல் விளையாட்டு, எழில் விளையாட்டு ஏறுகோள், ஒளிதல் விளையாட்டு, ஓடியாடல், ஓரை, குறி விளையாட்டு, கண்புதை விளையாட்டு, கவண், கவணை, கவறு, கழங்கு, வேலன் விளையாட்டு, களவுக்காய், களிநீர் விளையாட்டு. கன்னம் தூக்கல், காய்மறை, குத்துச்சண்டை, குரவை, குளிர், குறும்பூதச் சண்டை, கையெறி, கோழிச்சண்டை, சிற்றில், சிறுபாடு, சூது, செதுமொழி,

தகர்ச்சண்டை, தட்டை, தழல், தழூஉ, தழை, துணங்கை, தௌவிளி, தெற்றி, தைந்நீராடல், தொழிற்பாடல், நீச்சல்நடனம், நீச்சல் பந்து, பின்படகு, முன்படகு, வளிப்படகு, பண்ணை விளையாட்டு, பந்து, பறை, பாய்ச்சல், பாவை பிணையூபம், புதுமொழி, புதைமுகம், புனலாடல், பூ, பொய்தல், போறல், மதிமொழி, மரம்ஏறல், மரம் வளர்த்தல், மற்போர், மிதவை, முக்கால் சிறுதேர், முதுமொழி, மூழ்கல், யானைப்போர், யானையேற்றம், வட்டு, ஈங்கைவட்டு, ஈட்டுவட்டு, உருட்டு வட்டு, கைகரப்பு வட்டு, கையாடு வட்டு, கோட்டு வட்டு, சூதுவட்டு, நீர்வட்டு, நெல்லிவட்டு, மணிவட்டு, மழைத்துளி, வட்டுநா, வண்டல், வண்டற்பாவை, வல்லநாய், வல்லு, வல்லுசூது, வல்வில் வேட்டம், வலார்வில், வீளை, வேடம்”5.

### முடிவுரை

மனிதன் மனப்பக்குவம் அடையவும், இவ்வுலகத்தில் நோயின்றி வாழவும், உடலையும் உள்ளத்தையும் தூய்மையுடனும், எப்பொழுதும் தன்னைச் சுறுசுறுப்பாக வைத்துக்கொள்ளவும் உடற்பயிற்சி அவசியமாகிறது. உடற்பயிற்சி செய்வது என்பது கொஞ்சம் கடினமாகவே தோன்றும். அதுவே விளையாட்டுப் போக்கில் செய்தால் அனைவரும் செய்வார்கள். அந்த விளையாட்டில் வெற்றியோடு பாராட்டும் பெறுவது மகிழ்ச்சித்தான். விளையாட்டுகள் மனிதனை சமூகச்சூழலுக்கு ஏற்றவாறு மாற்றம் செய்ய பழக்குகிறது. வீழ்ந்து போனவனைப் போராடி வெற்றிப்பெற உந்துகிறது. விளையாட்டுகள் மனிதனுக்கு உடல்நலத்தை வழங்கும் அருட்கொடை ஆகும்.

### உதவிய நூல்கள்

1. சக்திவேல். சு, நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, ப.246.
2. இறையரசன. பா, தமிழர் நாகரிக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, ப.288.
3. பிள்ளை. கே.கே, தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும், உலக தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, ப.100.
4. இறையரசன். பா, தமிழர் நாகரிக வரலாறு, பூம்புகார் பதிப்பகம், சென்னை, ப.263.